மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(6) தனியார் அலுவல்கள்

(அ) சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, வரதட்சணைத் தடுப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/73).

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

"That the Tamil Nadu Dowry Prohibition Bill, 1973 (L.A. Bill No. 24 of 1973) be taken into consideration."

The motion was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரதட்சணை தடுப்பு மசோதா ஒரு முக்கியமான சமுதாய சீர்திருத்தத்திற்கு அடிப்படையாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டசபையில் முன்பு செல்ப் ரெஸ்பெக்ட் மாரியேஜ்ஸை